# இஸ்லாம் கூறும் குடும்பவியல்

உலகில் உள்ள மதங்கள் சில வணக்க வழிபாட்டு முறைகளைத்தான் மக்களுக்குப் போதிக்கின்றன. பெரும்பாலும் மனிதனின் அன்றாட நிகழ்வோடு தொடர்புள்ள வாழ்வியல் பிரச்சினைகளை அந்த மதங்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. உலகில் உள்ள மதங்களில் இஸ்லாம் மட்டும் தான் வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய ஒளி விளக்காக திகழ்கின்றது. விஞ்ஞான முன்னேற்றத்தின் உச்சியில் இருக்கும் இந்த அறிவியல் உலகில் எழும் நவீன கால சவால்களை இஸ்லாம் தவிர வேறு மதங்களால் சமாலிக்க முடியாது .இதனால் தான் தேனடையை மொச்சும் வண்டுக்களைப் போல் இஸ்லாத்தை நோக்கி பலர் வந்து கொண்டிருக்கின்றனர். இஸ்லாம் மனித வாழ்வில் சிந்தி விழும் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டும் அற்புத மார்க்கம். அந்த வகையில் இஸ்லாம் சமூக கட்டமைப்பின் அடித்தளமாக திகழும் குடும்பவியல் குறித்தும்துல்லியமாக எடுத்துறைக்கின்றது.

இஸ்லாம் கூறும் குடும்பவியல் என்ற தலைப்பில் சென்ற வருடம் (2010) மவ்லவி பீ.ஜெய்னுல் ஆப்தீன் அவர்கள் ஆற்றிய தொடர் சொற்பொழிவு எனது தளத்தில் இன்ஷா அல்லாஹ் தொடராக வெளியிடப்படும்.

குடும்பவியலின் தாத்பரியத்தை குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளின் அடிப்படையில் தனக்கே உரிய அழகிய நடையில் அனைவரும் புரியும் வகையில் மிகவும் எழிய தமிழில் இவர் எடுத்துரைக்கும் முறை தமிழ்பேசும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.அதிலும் குறிப்பாக வெளிநாடுவாழ் மக்களிடம் இந்நிகழ்ச்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் கடந்த 21.08.2010 அன்று Times of india பத்திரிக்கை முதல் பக்க செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதிலும் குறிப்பாக இந்தத் தொடர் கணடா வாழ் இந்து மக்களிடம் பெரும் தாக்கத்தை உண்டாக்கியதாக கணடாவில் அப்போதிருந்த எனது ஆசிரியர் மவ்லவி முஹம்மது (ரஹ்மானி) அவர்கள் என்னிடம் தெரிவித்தார். அப்போது தான் இதை நுர்லாக்க வேண்டும் என்ற உந்துதல் எனக்கு ஏற்பட்டது.

குடும்பபொறுப்பு வாழ்வாதாரத் தேடல் பட்டப்படிப்பு என பல வேலைப்பளுக்களுக்கு மத்தியில் நான் சுழன்று கொண்டிருப்பதால் இரண்டு வாரங்களுக்குல் ஒரு தொடர் வெளியிடப்படும். **இது உரை நடையில் இருப்பதால் எழுத்து நடைக்கு ஏற்றாப்போல் வடிவம் கொடுக்கப்படும்.** இது அல்லாஹ் நாடினால்...........

இஸ்லாம் மார்க்கதைப் பொறுத்த வரையில் அது எந்த ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் முழுமையாகவும், தெளிவாகவும், அறிவுக்குப் பொருத்தமான முறையிலும், நடைமுறைக்கு சாத்தியமான வகையிலும் அனைத்து பிரச்சினைகளையும் அணுகக்கூடிய ஒரு மார்க்கம் ஆகும். நம்முடைய சமூகத்திலே கடந்த சில ஆண்டுகளாக குடும்ப அமைப்புகள் சீரழிந்து வருகின்றன. முஸ்லிம் சமுதாயமாக இருந்தாலும் மற்றைய சமூக மக்களாக இருந்தாலும் அக்குடும்பங்களுக்கு மத்தியில் நிறைய பிரச்சினைகளை நாம் சந்தித்து வருகின்றோம். இதற்கெல்லாம் அடிப்படை காரணம் என்னவென்று சொன்னால் இஸ்லாம் சொல்லக்கூடிய அந்தக்குடும்பவியலை, அதனுடைய சட்டதிட்டங்களை முஸ்லிம்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கின்ற காரணத்தினாலும், அது அவர்களுக்கு தெளிவாக சொல்லப்படாத காரணத்தினாலும் ஆகும்.

## *படைப்பின் உற்பத்தி*

முதலாவதாக அல்லாஹ்வுடைய படைப்புகளிலே, எந்தெந்த படைப்புகளை அல்லாஹ் நேரடியாகப் படைத்திருக்கின்றானோ அவை எல்லாம் இனப்பெருக்கம் செய்யக்கூடிய வகையிலே படைத்திருக்கின்றான். ஒன்றிலிருந்து இன்னொன்றை உற்பத்தியாக்கக் கூடிய வகையிலேயே அல்லாஹ்வுடைய படைப்பு மாத்திரம் தான் இருக்கும். மனிதர்கள் எதையாவது உற்பத்தி செய்வார்கள் என்று சொன்னால் அது இன்னொன்றை உற்பத்தி செய்யாது. உதாரணத்திற்கு ஒரு பேனாவை உற்பத்தி செய்தோம் என்று சொன்னால் அந்த

பேனாவிலிருந்து இன்னொரு பேனா பிறக்காது. இன்னொன்றை தனியாகத்த தான் செய்ய வேண்டும். ஆனால் அல்லாஹ்வைப் பொறுத்த வரையில் ஒரு ஜோடி மனிதனை படைக்கிறான், அதிலிருந்து இத்தனை மக்கள் உருவாகியிருக்கின்றோம். அல்லாஹ் நேரடியாக ஒரு ஜோடியைத் தான் படைக்கிறான். இது போல எல்லா உயிரினங்களிலுமே ஒரு ஜோடி ஆடு, ஒரு ஜோடி மாடு என்று இப்படித்தான் அல்லாஹ் படைத்திருக்கின்றான். அது தான் பல்கிப்பெருகி பல உயிரினங்களாக வளர்ந்திருக்கிறதை நாம் பார்க்கின்றோம்.

அதே போல தாவரங்களை எடுத்துக் கொண்டாலும் கூட ஒரே ஒரு விதையிலிருந்து ஏராளமான மரங்களை அல்லாஹ் உற்பத்தி செய்யக்கூடிய அதிசயத்தை நாம் பார்க்கிறோம். இப்படி ஒவ்வொரு உயிரினமும் பல்கிப் பெருக வேண்டுமென்பதற்காக அவற்றுக்கு மத்தியிலே ஆண், பெண் என்ற இரண்டு இனத்தை உருவாக்க ஒன்றையொன்று கவரக்கூடிய வகையிலே அதிலே ஒரு ஈடுபாட்டை ஏற்படுத்தி அதன் மூலமாகத்தான் அல்லாஹ் உயிரினங்களை பெருகச் செய்கின்றான். ஒவ்வொரு உயிரினத்திலும் தாவரங்கள் உட்பட அவை தானாக கவரக்கூடிய தன்மை இல்லாவிட்டாலும் கூட அதிலும் ஆண், பெண் என இருக்கின்றது. பூக்களிலும் ஆண் பூ, பெண் பூ என் இருக்கின்றது. அந்த ஆண் பூ, பெண் பூ இரண்டும் இணைந்தால் மாத்திரமே பூக்கள் காய்க்க முடியும். அந்த விதமாகத் தான் எல்லா உயிரினங்களையும் அல்லாஹ் படைத்திருக்கின்றான்.

## *குடும்ப அமைப்பு*

எல்லா உயிரினங்களுக்கும் அந்த ஆண், பெண் என்ற ஈடுபாட்டின் மூலமாக பெருகக் கூடியதாக இருந்தாலும் மனிதனுக்கு மாத்திரம் தான் குடும்பம் என்ற இந்த அமைப்பு இருக்கிறது. மிருகங்களுக்கு குடும்பம் என்ற ஒரு அமைப்பு கிடையாது. இவ்வாறு எல்லா உயிரினங்களிலும்

ஆண், பெண் என்ற இனம் இருந்தாலும் அவைகளுக்கு மத்தியில் குடும்பம் என்ற அமைப்பு இருக்குமா என்று கேட்டால் இருக்காது. அவைகள் இனப்பெருக்கத்துக்காக சேர்வதோடு தங்களுடைய வேலையை முடித்துக் கொள்ளும். அதற்குப் பிறகு அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை அவை சுமப்பது கிடையாது. குறிப்பாக பெண் இனம் தான் எல்லா விளைவுகளையும் சுமந்தாக வேண்டும். மிருகங்களை எடுத்துக் கொண்டால் அதன் ஆண் இனத்துக்கு எந்தவித பொறுப்பும் கிடையாது. ஆண் இனத்துக்கு சேர்ந்ததோடு அதனுடைய வேலை முடிந்துவிட்டது. பெண் இனத்திற்கு வரக்கூடிய இந்த சுமைகளில், கஷ்டங்களில் நமக்கும் பங்கு இருக்கின்றது, நாமும் அதற்குக் காரணமாக இருந்தோம் என்ற அறிவு அதற்கு இல்லாத காரணத்தால் அது அதன்பாட்டிற்கு வேறு போக்கில் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

ஆனால் மனிதன் பகுத்தறிவு உள்ள காரணத்தினால் இதைச் சிந்திக்கிறான். நாம் இனப்பெருக்கத்திற்காக சேர்ந்தாலும் இதனால் பெண்ணுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களுக்கெல்லாம் ஆண்களாகிய நாம் தான் காரணம், நாம் தான் இதற்கு பொறுப்பாளியாக இருக்கின்றோம், நாமும் இந்த சிரமத்தில் பங்கெடுத்தாக வேண்டும் என்ற ஒரு சிந்தனை பகுத்தறிவு உள்ள மனிதனுக்கு மாத்திரம் தான் உள்ளது. இந்த மாதிரி ஒரு நல்ல எண்ணத்தில் தான் குடும்பம் என்ற அமைப்பை மனிதன் உருவாக்குகின்றான். குடும்பம் என்ற அமைப்பு இல்லையெனில், கணவன் மனைவி என்ற கட்டுக்கோப்புக்குள் மனிதன் வாழவில்லை எனில், எவரும் எந்தவிதமாகவும் வாழலாம் என்றால் பெண்களுடைய சுமைகளை பெண்கள் மாத்திரம் தான் சுமக்க வேண்டி வரும். ஆண்கள் எந்தவிதமான பங்கையும் எடுக்க மாட்டார்கள். குறிப்பாக குடும்பம் என்ற இந்த அமைப்பு இல்லையென்று சொன்னால் பெண்கள் பயங்கரமான, பாரதூரமான துன்பங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்படும். அதைத் தவிர்ப்பதற்கு தான் இந்த குடும்ப அமைப்பு என்பதாகும். ஆதம் (அலை) அவர்களுடைய காலத்திலிருந்து இந்த அமைப்பை அல்லாஹ் உருவாக்கி உள்ளான். ஆதம் (அலை)

அவர்களைப் படைத்து அவர்களுக்கு ஒரு ஜோடியைக் கொடுத்து நல்லது, கெட்டது என்பவற்றை சுமக்க வேண்டும் என்று சொல்லி, நீ தான் உன் மனைவியை பராமரிக்க வேண்டும் என்று கூறி அந்த முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களிடமிருந்து அல்லாஹ் வழங்கிய அந்த குடும்ப சட்டம் தான் உலகம் முழுவதும் மனித குலத்தில் குடும்ப அமைப்பாக இருந்து கொண்டிருக்கிறது.

يا أيها الناس اتقوا ربكم الذي خلقكم من نفس واحدة وخلق منها زوجها وبث منهما رجالا كثيرا ونساء واتقوا الله الذي تساءلون به والأرحام إن الله كان عليكم رقيبا (1)

மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான் ( அல்குர்ஆன் 4 .1)

முதல் மனிதர் ஆதம் அலை அவர்களிடம் இருந்து அல்லாஹ் கொடுத்த குடும்ப அமைப்புத்தான் இன்று உலகம் முழுவதும் மனித குலத்திடம் இருந்து வருகிறது.

இன்று நாம் வாழும் நவீன காலத்தில் இந்த குடும்ப அமைப்புக்களை சீர்குழைக்கும் பலவிதமான கெட்ட சிந்தனைகள் மக்கள் மத்தியில் தூவப்படுகிறன.

குடும்பம் என்றொன்ரு தேவையில்லை,கணவன்,மனைவி என்ற முறை வேண்டாம் என்றெல்லாம் கூறி ஒருவிதமான கேடு கெட்ட சிந்தனையை மக்கள் மத்தியில் சிலர் இன்று பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். குடும்பம் தேவையில்லை நாம் எப்படி வேண்டுமென்றாலும் வாழலாம் குடும்பம் என்ற வட்டத்திற்க்குல்

எதற்க்காக நாம் இருக்க வேண்டும்? ஒரு ஆண் எதை விரும்புகின்றானோ அதை அவன் செய்து கொள்ளட்டும். ஒரு பெண் எதை விரும்புகின்றாலோ அதை அவள் செய்து கொள்ளட்டும்.இதை ஏன் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும்? என்றெல்லாம் நச்சுக்கருத்துக்களை விதைத்து குடும்ப அமைப்பை சீர்குழைப்பதற்காக, இல்லாமலாக்குவதற்காக,அழித்தொழிப்பதற்காக, அறிவு ஜீவிகள் என்ற பெயரில் சில தீய சக்திகள் செயல்படுகின்றன.

## குடும்ப அமைப்பை சிதைக்கும் தீய சிந்தனைகள்.

குடும்பம் என்ற அழகான வாழ்க்கை முறையை இல்லாமலாக்குவதற்கு ஷைத்தான் மூன்று விதமான செயல் திட்டங்களை மக்களுக்கு மத்தியில் பரப்பிக் கொண்டிருக்கிறான்.

1. துறவரம்

2. கட்டுப்பாடுகள் அற்ற உறவு முறை

3. ஓரினச்சேர்க்கை

### *1.துறவரம்.*

ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் தேவையில்லை, எல்லாவற்றையும் துறந்து கடவுளுக்கு நம்மை அர்ப்பணித்து தியானத்தில் இருக்க வேண்டும் என்ற சித்தாந்தம் பல மதங்களில் இருப்பதைக் காணலாம்.

இது ஒரு உயர்ந்த நிலையாக எல்லா மதங்களிலும் கருதப்படுகிறது. எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் இவர்கள் ஞானிகளாக, மகான்களாக, அறிவாளிகளாக, நம்மை விட சிறந்த மக்களாக

கருதப்படுகிறார்கள். குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் தாழ்ந்தவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இந்த சிந்தனை அனைவருக்கும் வந்தால் மனித குலம் அழிந்து போகும். ஆனால் இந்த சிந்தனையில் அதிகமானோர் விழவில்லை. லட்சத்தில் ஒருவர் என்ற வீதத்தில் இந்த சிந்தனைக்கு ஆள்பட்டிருப்பார்கள். இந்த சிந்தனைக்கு விருப்பப்பட்டு அனைவரும் சாமியாராக போனால் என்னவாகும்? அத்தோடு மனித குலம் முடிந்து போய்விடும். மனிதன் பிறக்க மாட்டான், உற்பத்தி ஆக மாட்டான், அவன் தான் கடைசியாக இருப்பான். இந்த சிந்தனை அனைவருக்கும் வந்துவிட்டால் மனிதகுலத்தை அழித்து நாசமாக்கி விடும். இறுதி நாள் வராமலேயே அழிந்து போவார்கள். கடவுளுக்காக தம்மை தியாகம் செய்து துறவரம் மேற்கொள்வது ஷைத்தானின் மாயவலை.

எல்லா மதங்களிலும் துறவரம் பற்றி கூறப்பட்டாலும் இஸ்லாம் இந்த துறவரத்தை கடுமையாக எதிர்க்கின்றது. ஆனாலும் நாம் ஒரு 20 அல்லது 25 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் வாழ்ந்த நமது முன்னோர்களை எடுத்துக்கொண்டோமேயானால் அவர்களும் இந்த தாக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றார்கள். எந்த தாக்கத்திற்கு என்றால் இந்த மாதிரி கடவுளுக்காக வேண்டி துறவரம் செய்வது, இறைவனுக்காக குடும்ப வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்வது நல்லது, அப்படி செய்பவர்கள் சிறந்தவர்கள், மகான்கள், பாராட்டுக்குரியவர்கள் என்ற சிந்தனை நம்முடைய மக்களிடமும் இருந்தது. தற்போது ஏகத்துவ எழுச்சி ஏற்பட்டதும் துறவரம் தவறானது என்ற சிந்தனை ஏற்பட்டுள்ளது. அதற்கு முன்னர் இருந்தவர்கள் எல்லாம் அவ்லியாக்களாக கருதப்பட்டார்கள். திருமணம் முடிக்காமல் ஒருவர் இருந்தார் என்றால், அவர் எப்படி பட்ட மகான் தெரியுமா? என்று தவறான ஒரு எண்ணம் மகான் என்பதற்கான ஒரு அடையாளமாக இருந்தது.

எந்தளவுக்கென்றால் இஸ்லாத்தின் பெயரால் இந்தத் திருமண வாழ்க்கையை கேவலமாகவும், கொச்சையாகவும் விமர்சித்த ஞானிகள் கூட இங்கே தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். அதற்கு ஒரு உதாரணமாக குன்னங்குடி மஸ்தான் என்ற ஒருவர் ஞானி என்று சொல்லிக் கொண்டார். அவரை மனிதர்கள் மகான் என்று மதித்தார்கள். அவருக்குக் கூட தந்தையார் பேட்டையில் ஒரு தர்கா கட்டி வைத்திருக்கிறார்கள். அவருடைய கவிதையில் திருமணத்தைப் பற்றி மிகக் கேவலமாகவும், இழிவாகவும், பெண்களைத் தரக்குறைவாகவும் ஏசுகிறார்.

*அவருடைய கவிதையை கவணியுங்கள்.*

சங்கையும் போக்கி சதிமானமாக சகசன்டியாக்கிவித்திடுவாள் வெகு பங்கப்படுத்தி விட்டிடுவாள்.அந்த மங்கையர் ஆசை வைத்தையையோ வையத்தில் பெண் கொண்ட பேர் பெற்ற பாட்டையும் கேட்டையும் பேசுவோமே நெஞ்சமே!

பெண் என்றால் நமது கண்ணியத்தை இல்லாமலாக்குபவள்,மக்கள் மத்தியில் நமக்கு கெட்ட பெயரை உண்டாக்குபவள் அந்த பெண் மீது ஆசை கொண்டவர்கள் படும் பாட்டைப் பற்றி பேசுவோமா நெஞ்சமே என்று பெண்கள் மீது அபாண்டமாக பழி சுமத்திப் பாடுகிறான் இந்த குணங்குடி மஸ்தான்.

இந்தப் பாடல்கள் ஒரு காலத்தில் பள்ளிகளில் வைத்துப் பாடப்பட்டது.அதே போல்

தங்க நகையும்,முகப்பணிச் சேலையும்,தாவெனவே குரங்காட்டுவாள்.ஆதியைத் தேடி அருள்பட நாடி அழுதழுது மடிபிடிப்பாள் நீதான் ஏதென்னை விட்டுப்பிரிவதும் என்றவள் ஏங்கி ஏங்கி துடிதுடிப்பாள். நாடிக்குரு வடி தேடி நடக்கிற நற்செயலை கசப்பாக்குவாள்..(இன்னும் பல பாடல்கள் உண்டு)

“பெண்கள் மீது ஆசை வைத்து இந்த மாதிரி கேடு கெட்டு போய்விட்டியடா, உன்னுடைய பாட்டைப் பற்றி பேசுவோமா? உன்னுடைய கேட்டைப் பற்றி பேசுவோமா?” என்று கேட்கிறார். பெண் என்பவள் நம் மானத்தை வாங்கிவிடுவாள், நம்மை கேவலப்படுத்தி விடுவாள், நம்முடைய மரியாதையை இல்லாமல் ஆக்கி விடுவாள் என்று இஸ்லாத்தின் பெயரால் இவர் கவிதை எழுதுகிறார். இந்தக் கவிதைகள் ஒரு காலத்தில் பள்ளிவாசல்களில் படிக்கப்பட்டது. இப்படி இஸ்லாத்தின் பெயரால் துறவரத்தை, குடும்ப வாழ்க்கை வேண்டாம் அவரவர் தன்னை மட்டும் காத்துக்கொண்டு போகவும் என்ற சித்தாந்தம் முஸ்லிம்களுக்குள்ளேயே நல்ல சித்தாந்தமாக இருந்ததற்கு இது ஒரு ஆதாரமாக இருக்கின்றது.

## *திருமணத்தை மறுப்பவர் இஸ்லாத்தில் இருக்க முடியாது.*

திருமணம் ஆகாமல் ஒருவர் நபிவழியைப் புறக்கணித்தால் அவர் எப்படி இறைநேசர் ஆவார்? என்ற ஒரு ஞானம் கூட இல்லாமல் இருந்தவர்களை இறைநேசர்கள், அந்தஸ்துக்குரியவர்கள் என்ற சித்தாந்தம் பிற மதங்களில் இருந்து காப்பி அடிக்கப்பட்டு நம்முடைய மக்களிடத்தில் ஒரு காலத்தில் தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இஸ்லாம் இந்த மாதிரி செயலை ஆதரிக்கின்றதா? என்று பார்த்தால் அறவே ஆதரிப்பது கிடையாது. இஸ்லாம் வன்மையாக இதைக் கண்டிக்கிறது. திருமண வாழ்க்கையை எவராவது புறக்கணிப்பாராயின் அவர் இஸ்லாத்தில் இருக்கவே முடியாது.

5063- حدثنا سعيد بن أبي مريم ، أخبرنا محمد بن جعفر ، أخبرنا حميد بن أبي حميد الطويل أنه سمع أنس بن مالك ، رضي الله عنه ، يقول جاء ثلاثة رهط إلى بيوت أزواج النبي صلى الله عليه وسلم يسألون عن عبادة النبي صلى الله عليه وسلم فلما أخبروا كأنهم تقالوها فقالوا وأين نحن من النبي صلى الله عليه وسلم قد غفر له ما تقدم من ذنبه وما تأخر قال أحدهم أما أنا فإني أصلي الليل أبدا وقال آخر أنا أصوم الدهر ، ولا أفطر وقال آخر أنا أعتزل النساء فلا أتزوج أبدا فجاء رسول الله صلى الله عليه وسلم فقال : أنتم الذين قلتم كذا وكذا أما والله إني لأخشاكم لله وأتقاكم له لكني أصوم وأفطر وأصلي وأرقد وأتزوج النساء فمن رغب عن سنتي فليس مني. أخرجه البخاري

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்களுடைய துணைவியரின் வீடுகளுக்கு மூன்று பேர் கொண்ட குழுவினர் வந்து நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் குறித்து வினாத் தொடுத்தனர். அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போது அவர்கள் நபி (ஸல்) அவர்கப்ன் வணக்க வழிபாடுகளைக் குறைத்து மதிப்பிட்டது போல் தெரிந்தது. பிறகு (அவர்களே அதற்குச் சமாதானமும் கூறிக்கொண்டு)முன்பின் தவறுகள் மன்னிக்கப்பட்டுவிட்ட நபி (ஸல்) அவர்கள் எங்கே? நாம் எங்கே என்று சொல்லிக்கொண்டனர். அவர்கப்ல் ஒருவர் (இனிமேல்) நான் என்ன செய்யப் போகிறேன் என்றால் எப்போதும் இரவில் தொழுதுகொண்டே இருக்கப்போகிறேன் என்றார். இன்னொருவர் நான் ஒருநாள் கூட விடாமல் காலமெல்லாம் நோன்பு நோற்கப் போகிறேன் என்று கூறினார். மூன்றாம் நபர் "நான் பெண்களைவிட்டும் ஒதுங்கியிருக்கப் போகிறேன். ஒருபோதும் மணமுடித்துக் கொள்ளமாட்டேன் என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (அந்தத் தோழர்களிடம்) வந்து இப்படி இப்படியெல்லாம் பேசிக்கொண்டது நீங்கள்தாமே! அறிந்துகொள்ளுங்கள்: அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களைவிட அதிகமாக நான் அல்லாஹ்வை அஞ்சுபவன் ஆவேன். அல்லாஹ்வைப் பயந்து நடப்பவன் ஆவேன். ஆயினும் நான் நோன்பு நோற்கவும் செய்கிறேன் விட்டுவிடவும் செய்கிறேன்; தொழுகவும் செய்கிறேன் உறங்கவும் செய்கிறேன்; மேலும் நான் பெண்களை மணமுடித்தும் உள்ளேன். ஆகவே என் வழிமுறையை யார் கைவிடுகின்றாரோஅவர் என்னைச் சார்ந்தவர் அல்லர் என்று சொன்னார்கள்.

(புகாரி - 5063)

நபியவர்களின் வீட்டுக்கு வந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முடிவை எடுக்கிறார்கள்.ஒருவர் தூங்காமல் இறைவனை வணங்கிக் கொண்டே இருக்கப் போவதாகவும், இரண்டாமவர் காலம் பூராகவும் நோன்பு நோற்கப் போவதாகவும்,மூன்றாமவர் திருமணமே முடிப்பதில்லை என்றும் முடிவெடுக்கிறார்கள்.

அப்போது நபியவர்கள் வந்து அதை கண்டித்தது மட்டுமல்லாமல் திருமணம் செய்யாதவர் இஸ்லாத்திலேயே இருக்க முடியாது என்ற தகவலையும் அதில் தெரிவிக்கிறார்கள்.

திருமணம் என்பது இஸ்லாத்தில் முஸ்லிமாக இருப்பதற்குறிய ஒரு அடையாளமாக நபியவர்கள் நமக்கு சொல்லித் தருகிறார்கள்.

எனவே திருமணம் செய்யாமல் இறைவனுக்காக தன்னை அர்ப்பணிக்கப் போவதாக ஒரு ஆண் சொன்னாலும், பெண் சொன்னாலும் அவர் நம்மைச் சேரந்தவர் கிடையாது, நபி (ஸல்) அவர்களுடைய உம்மத்தைச் சேரந்தவர் கிடையாது. எந்தளவுக்கு இஸ்லாம் திருமண வாழ்க்கையை வலியுறுத்துகிறது என்றால் அதை இஸ்லாத்துடைய அடையாளமாக ஆக்கி வைத்திருக்கிறது. திருமணத்தை துறப்பது நல்லது என நினைத்தால் முஸ்லிமாக இருக்க முடியாது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

யாருக்கு கண்டிப்பாக வசதி உள்ளதோ அவர் திருமணம் செய்துகொள்ளட்டும். இல்லையெனில் அவர் நோன்பு நோற்கட்டும். பெண் கிடைக்கவில்லை அல்லது மஹர் கொடுக்க வசதியில்லை போன்ற காரணங்களால் மட்டுமே நோன்பு வைத்து கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர துறவரம் செய்யக் கூடாது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று சொல்வார்கள். எனவே நோன்பு நோற்றுக்கொண்டிருக்கும் போது இந்த மாதிரியான உணர்வுகளுக்கு நாட்டம் இருக்காது, தவறு செய்வதற்கு மனதில் தூண்டுதல் குறைவாக இருக்கும். அதனால் நோன்பு வைத்துக்கொண்டு கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு சொல்லி திருமணம் செய்வதை வலியுறுத்துகிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள். இல்லற வாழ்க்கையை இஸ்லாம் ரொம்பவும் வலியுறுத்திச் சொல்வதை காணலாம்.

மக்காவில் இருந்து மதினாவுக்கு நபித்தோழர்கள் ஆண்கள் அதிகளவிலும் பெண்கள் மிக குறைவாகவும் ஹிஜ்ரத் மேட்கொண்ட வேளையில் மதினாவில் பெண்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.அப்போது நபித்தோழர்கள் பெண்கள் பற்றாக்குறையை முறையிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் துறவரத்தையோ ஆண்மை நீக்கத்தையோ வழிகாட்ட வில்லை.

5065- حدثنا عمر بن حفص ، حدثنا أبي ، حدثنا الأعمش ، قال : حدثني إبراهيم ، عن علقمة قال : كنت مع عبد الله فلقيه عثمان بمنى فقال يا أبا عبد الرحمن إن لي إليك حاجة فخليا فقال عثمان هل لك يا أبا عبد الرحمن في أن نزوجك بكرا تذكرك ما كنت تعهد فلما رأى عبد الله أن ليس له حاجة إلى هذا أشار إلي فقال يا علقمة فانتهيت إليه وهو يقول أما لئن قلت ذلك لقد قال لنا النبي صلى الله عليه وسلم يا معشر الشباب من استطاع منكم الباءة فليتزوج ، ومن لم يستطع فعليه بالصوم فإنه له وجاء. أخرجه البخاري

அல்கமா இப்னு கைஸ் (ரஹ்) அறிவித்தார்.

நான் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களுடன் இருந்துகொண்டிருந்தேன். அப்போது 'மினா'வில் அன்னாரை உஸ்மான்(ரலி) சந்தித்து, 'அபூ அப்தில் ரஹ்மானே! (அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் அவர்களே!) தங்களிடம் எனக்கு ஒரு தேவை இருக்கிறது" என்று கூறினார்கள். பிறகு அவர்கள் இருவரும் ஒரு தனியான இடத்திற்குச் சென்றார்கள். அங்கே உஸ்மான்(ரலி) (அப்துல்லாஹ்(ரலி) அவர்களிடம்) 'அபூ அத்திர் ரஹ்மானே! உங்களின் இளமைக் காலத்தை நினைவுபடுத்துகிற ஒரு கன்னிப் பெண்ணை உங்களுக்கு நான் மணமுடித்துத் தருவதில் தங்களுக்கு விருப்பமுண்டா?' என்று கேட்டார்கள். திருமணம் தமக்குத் தேவையில்லை என்று அப்துல்லாஹ்(ரலி) கருதியபோது என்னை நோக்கி அவர்கள் சுட்டிக்காட்டி 'அல்கமாவே!" என்று அழைத்தார்கள். நான் அவர்களை அடைந்தேன். அப்போது (உஸ்மான்(ரலி) அவர்களிடம் அப்துல்லாஹ்) அவர்கள், நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டீர்கள். ஆனால், நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் பின்வருமாறு அல்லவா கூறினார்கள்:

"இளைஞர்களே! உங்களில் தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றவர் மணந்துகொள்ளட்டும்! இயலாதோர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும். ஏனெனில், நோன்பு (ஆசையைக்) கட்டுப்படுத்தக்கூடியதாகும்" என்று தெரிவித்தார்கள்.(**புகாரி** - 5065)

எனவே திருமண ஆசை வருவதற்காக வேண்டி ஆண்மையை நீக்கிக்கொள்ள வேண்டாம் என்று நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்.

எனவே திருமணம் என்பது அமையும் வரைக்கும் நோன்பு வைத்து கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாரக்கம் சொல்கின்றதே தவிர அல்லாஹ்வுக்காக வேண்டி எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டும் என்று சொல்லவேயில்லை.

மார்க்க அடிப்படை இப்படியிருக்க நாம் சிந்தித்துப் பார்த்தால் கூட குடும்ப வாழ்க்கை இல்லாமல் துறவரம் இருப்பவர்கள் ஒரு போலித்தனத்திலேயே இருக்கின்றார்கள் என்பது விளங்கும். துறவரம் என்றால் என்ன? “எதையும் ஆசைப்படக்கூடாது, எதிலும் விருப்பம் இருக்கக்கூடாது, இறைவனுக்காக அனைத்தையும் துறந்து விட வேண்டும்” என்பது தான் துறவரம். இப்படி துறவரம் செய்பவர்கள் உண்மையாளர்களாக இருந்தால் பெண்கள் வேண்டாம், ஆடையும் வேண்டாம் என்று சொல்கின்றவர்கள் சாப்பாடு வேண்டாம் என்று சொல்கின்றார்களா? சாப்பாடு கூட ஒரு ஆசை தான். ஆனால் கடவுளுக்காக சாப்பிடாமல் இருப்பேன் என்று எவராவது சொல்கின்றார்களா? இதிலிருந்து இது முடியாது என்பதை விளங்கிக்கொள்ளலாம். உணவு என்பது கட்டாயம் தேவை. அது இல்லாமல் வாழ முடியாது என்பதை விளங்குகிறான். எதற்குமே ஆசைப்படக் கூடாது என்று சொல்கின்றவன் ஆடையைக் கூட துறக்கத் தயாராக இருக்கின்றான், பெண்களைக் கூட துறக்கத் தயாராக இருக்கின்றான் ஆனால் அதே மாதிரியான ஒரு ஆசை தான் சாப்பிடுதல் என்பது. இதை மட்டும் ஏன் விட மாட்டான்? திருவோட்டை தூக்கிக்கொண்டு சாப்பாடு கேட்டு போகிறான். ஆசையை துறக்காத நாம் பாத்திரம் ஏந்திக்கொண்டு செல்கின்றோமா? அதனால் நம்மை விட ஆசை அதிகமாக உள்ளவனாகத் தான் துறவி இருக்கின்றான். ஆகவே ஆசையைத் துறப்பது என்பது போலித்தனமானது, யாராலும் ஆசையை துறக்க முடியாது என்பதற்கு இது ஒரு முக்கியமான காரணமாக இருப்பதைக் காணலாம்.

நாம் உலகத்தில் பார்க்கிறோம் யாரெல்லாம் ஆசையைத் துறந்ததாக சொல்கின்றார்களோ அவர்கள் பெண்களுடன் தனிமையாக இருக்கும் வாய்ப்பை காட்டில் இருக்கும் காரணத்தால் பெற்றிருக்க மாட்டார்கள். ஆனால் வாய்ப்பு கிடைத்தால் கெட்ட வழியிலும் போய் விடுவார்கள். யாரெல்லாம் துறவரம் என்று போனார்களோ அவர்களில் பலர்

நாறிப்போன காட்சியைப் பார்க்கிறோம். உச்ச நிலையில் இருந்தவர்கள், மதிக்கப்பட்டவர்கள் கூட பெண்களுடன் இருக்க சந்தர்ப்பம் கிடைக்கும் போது துறவரம் பொய் என்பதைக் காட்டிவிட்டார்கள். எனவே துறவரம் என்பது சாத்தியமற்றது. எப்படி பசித்தால் சாப்பிடாமல் இருக்க முடியாதோ அதே மாதிரி இதுவும் ஒரு வகை பசி தான். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இந்தப் பசிக்கு முறையான தீனியைக் கொடுக்க வேண்டுமே தவிர தீனியே கொடுக்க மாட்டோம் என்று சொன்னால் என்னவாகும்? திருடிச் சாப்பிட வேண்டி வந்துவிடும், தப்பான முறையில் அனுபவிக்க வேண்டி வந்திவிடும். ஹலாலான சாப்பாடு இருந்தால் திருட மாட்டான். சாப்பாடே இல்லை என்றால் திருடித்தான் சாப்பிடுவான். அதை விளங்காமல் நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒரு சித்தாந்தத்தை உலகுக்கு சொல்லிக் கொடுக்கப் பார்க்கிறார்கள். எங்களால் செய்ய முடியவில்லை ஆனால் மகான்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற அளவில் பிறமத மக்களிடத்தில் துறவரத்தைப் பற்றி ஒரு நம்பிக்கை இருக்கிறது.

அதுபோக எல்லாவற்றையும் துறந்தோம் என்று வைத்தால் துறவி செய்யும் நன்மையை விட குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்கள் அதிக நன்மை செய்வார்கள். காரணம் எல்லாவற்றையும் துறந்தவனுக்கு பெற்ற தாயைக் கவனிக்க கிடைக்குமா? தாய், தந்தை, குடும்பம் எல்லாவற்றையும் அவன் துறந்துவிட்டானே. இந்த மகத்தான நன்மையைக் கூட அடைய முடியாத கேடு கெட்ட பிறவிகளாக இந்த துறவிகள் இருப்பதை பார்க்கிறோம். பெற்ற பிள்ளைகள், குடும்பத்தை கவனிப்பதால் ஏற்படும் நன்மையை இழக்க நேரிடும். அதே மாதிரி ஒருவரை சந்தித்து ஸலாம் கூறுதல், உதவி செய்தல், போராட்டங்களில் ஈடுபடுதல், சமுதாயத்துக்கு நன்மை செய்தல் ஆகிய நன்மையான காரியங்கள் துறவரம் மூலம் இல்லாமல் போகும். சாதாரண மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் கூட துறவிகளுக்கு கிடைக்காது. குடும்பத்தில், நாட்டில் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் அதை கவனிக்க மாட்டேன் என்று போனார்களேயானால் இது உயர்ந்த நிலையா? மட்டமான நிலையா? இது ஒரு கீழ்த்தரமான நிலையாகும்.

உயர்ந்த நிலையாக எண்ணும் இந்த துறவரம் என்ற சித்தாந்தம் குடும்பங்களை சீரழிக்கும். கணவன் மனைவி என்ற அமைப்பில்

இருந்தால் தான் குடும்பம் என்ற சீரான நிலை ஏற்படும். அப்படியான இணைப்பு இல்லாமல் உறவுகள் இன்றி போனால் அவன் மட்டும் தனித்தவனாக வருவான். குடும்பம் என்ற அமைப்பை சீரழிக்கும் சித்தாந்தத்தில் முதலிடம் வகிப்பதாக இந்த துறவரம் உள்ளது. இஸ்லாம் துறவரத்தை வன்மையாகக் கண்டிக்கின்றது. ஒரு காலத்திலும் இதனை ஏற்றுக்கொள்ளாது.

யாரெல்லாம் துறவரம் என்று பேசினார்களோ அப்படிப்பட்ட பலர் பெண்கள் விஷயத்தில் நாறிப்போனதை உலகம் கண்டு கொண்டுதான் இருக்கிறது.

5071 - حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ المُثَنَّى، حَدَّثَنَا يَحْيَى، حَدَّثَنَا إِسْمَاعِيلُ، قَالَ: حَدَّثَنِي قَيْسٌ، عَنِ ابْنِ مَسْعُودٍ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: كُنَّا نَغْزُو مَعَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَيْسَ لَنَا نِسَاءٌ، فَقُلْنَا: يَا رَسُولَ اللَّهِ، أَلاَ نَسْتَخْصِي؟ «فَنَهَانَا عَنْ ذَلِكَ» أخرجه البخاري

இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு போரில் கலந்துகொண்டிருந்தோம். அப்போது எங்களுடன் துணைவியர் எவரும் இருக்க வில்லை. ஆகவே நாங்கள் அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் காயடித்து (ஆண்மை நீக்கம் செய்து) கொள்ளலாமா? எனறு கேட்டோம். அப்போது நபி (ஸல்) அவ்வாறு செய்ய வேண்டாமென எங்களைத் தடுத்தார்கள்.

(புகாரி - 5071)

5076 - وَقَالَ أَصْبَغُ: أَخْبَرَنِي ابْنُ وَهْبٍ، عَنْ يُونُسَ بْنِ يَزِيدَ، عَنْ ابْنِ شِهَابٍ، عَنْ أَبِي سَلَمَةَ، عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: قُلْتُ: يَا رَسُولَ اللَّهِ إِنِّي رَجُلٌ شَابٌّ، وَأَنَا أَخَافُ عَلَى نَفْسِي العَنَتَ، وَلاَ أَجِدُ مَا أَتَزَوَّجُ بِهِ النِّسَاءَ، فَسَكَتَ عَنِّي، ثُمَّ قُلْتُ: مِثْلَ ذَلِكَ، فَسَكَتَ عَنِّي، ثُمَّ قُلْتُ: مِثْلَ ذَلِكَ، فَسَكَتَ عَنِّي، ثُمَّ قُلْتُ مِثْلَ ذَلِكَ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «يَا أَبَا هُرَيْرَةَ جَفَّ القَلَمُ بِمَا أَنْتَ لاَقٍ فَاخْتَصِ عَلَى ذَلِكَ أَوْ ذَرْ» أخرجه البخاري

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் (ஒரு முறை) அல்லாஹ்வின் தூதரே! நான் ஓர் இளைஞன்; பெண்களை மணமுடித்துக்கொள்ளத் தேவையான பொருள் ஏதும் என்னிடம் இல்லை. (இந்நிலையில்) நான் தவறான வழிக்குச் சென்றுவிடுவேனோ என என்னைப் பற்றி நானே அஞ்சுகிறேன். (நான்

காயடித்துக்கொள்ளலாமா?) என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (பதிலப்க்காமல்) மௌனமாக இருந்தார்கள். மீண்டும் நான் முன் போலவே கேட்டேன். அப்போதும் மௌனமாகவே இருந்தார்கள். பிறகும் நான் முன் போலவே கேட்டேன். அப்போதும் மௌனமாகவே இருந்தார்கள். பிறகு (நான்காவது முறையாக) முன் போலவே நான் கேட்டபோது அபூஹுரைரா! நீங்கள் (வாழ்க்கையில்) சந்திக்கவிருக்கின்ற அனைத் தையும் (ஏற்கெனவே எழுதியாயிற்று. அவற்றை) எழுதிய எழுதுகோலும் கூட காய்ந்துவிட்டது. எனவே நீங்கள் காயடித்துக்கொள்ளுங்கள்; அல்லது சும்மா இருங்கள். (எல்லாம் ஒன்று தான்.) என்று சொன்னார்கள்.

(புகாரி - 5076)

**குடும்ப அமைப்பை சீரழிக்கும் இந்த துறவரத்தை இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது.**

## *கட்டுப்பாடுகள் அற்ற உறவு முறை*

ஆண்கள் மத்தியிலும் பெண்கள் மத்தியிலும் பாலியல் விஷயத்தில் எந்தவித கட்டுப்பாடுகளும் அற்ற முறையாகும். ஒரு ஆண் அல்லது ஒரு பெண் எத்தனை பேருடனும் உறவு வைத்துக் கொள்ளலாம், எப்படி வேண்டுமானாலும் வாழலாம், இது எங்களது உரிமை, சுதந்திரம், யாரும் கட்டுப்படுத்தக்கூடாது என்ற முறையாகும். இந்த மாதிரி எல்லோரும் போனால் குடும்பம் எப்படி இருக்கும்? கணவன், மனைவி என்ற உறவு இங்கு இல்லாதிருக்கும் வாழ்க்கையில் குழந்தைகளுக்கு யார் பொறுப்பு? சமூகத்தில் எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் வாழலாம் என்ற சித்தாந்தமும் இன்று உலகில் வந்துள்ளது. இந்த நவீன யுகத்திலே நீதிபதிகள் இதற்கு அங்கீகாரமும் அளித்துள்ளனர்.

திருமணம் என்றால் ஒரு பொறுப்பை சுமக்கிறோம் ஆனால் இந்த முறையில் பொறுப்பை சுமக்கத் தேவையில்லை. திருமணம் எனும்

அமைப்பில் ஆணும் பெண்ணும் ஒருவொருக்கொருவர் தியாகங்கள் செய்து வாழ்கின்ற அழகான குடும்ப அமைப்பை நாசமாக்குகின்ற ஒரு முறை தான் இந்த கட்டுப்பாடுகளற்ற வாழ்க்கை முறை ஆகும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கட்டுப்பாடில்லாத சுதந்திரமானது ஆண் பெண் விஷயத்தில் எந்த சட்டமும் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. நாட்டில் உள்ள நீதிபதிகளே இவ்வகையான முறைகேடான வாழ்க்கை முறைக்கு எந்தப்பிரிவில், சட்டத்தில் அவர்களைக் கைது செய்வது என்று கேட்கிறார்கள். எனவே நாட்டிலேயே இதற்கு எந்தவித தடையும் கிடையாது.

ஆனால் சட்டத்தை விட சட்டத்தைக் காப்பாற்றுகிறவர்களை விட பொது மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். எனவே எல்லோருக்கும் இந்த நடைமுறையில் விருப்பமில்லை என்பதை அறியலாம். ஆனால் சட்டமோ கட்டுப்பாடுகளின்றி எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கிறது. நிர்ப்பந்தம், பலாத்காரம் தான் பண்ணக்கூடாது ஆனால் ஆணும் பெண்ணும் விரும்பினால் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கின்றது சட்டம். உலக நாடுகளில் பல நாடுகளில் இது தான் சட்டமாக உள்ளது. ஆனால் மக்கள் அனைவரும் இச்சட்டத்தைக் கடைப்பிடிக்க தயாராக இல்லை. மக்கள் வெறுக்கின்றார்கள். ஒரு சிலரின் விருப்பத்திறகாக வேண்டி கேடுகெட்ட இந்த வாசலை திறந்து வைத்திருக்கிறார்கள். இப்படி ஒரு நிலைமையில் அனைத்து மக்களும் இருந்தால் என்னவாகும்? குடும்பம் என்று ஒன்று இருக்காது. இதில் அதிகமான பாதிப்பு பெண்களுக்கு ஏற்படும். இந்த மாதிரி கொஞ்ச நேர சந்தோஷத்துக்காக உறவு கொண்டு குழந்தை உருவாகி, அதை சுமந்து அதற்குப் பிறகு எந்தவித பாதுகாப்பும் இல்லாத நிலை தான் உண்டாகும். பெண்கள் தங்களது கைகளைக் கொண்டு வாழ வேண்டிய நிலை ஏற்படும். பெண்களின் பலயீனத்தைக் கொண்டு தான் குடும்ப அமைப்பு என்ற ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இது மாதிரி கட்டுப்பாடு இல்லாத நிலைக்கு பெண்களும் போக ஆரம்பித்தால், ஆதரித்தால் இதனுடைய கேடு, உடம்பில் வழுவிழந்து முதுமையான நிலைக்கு போகும் போது தான் தெரியவரும். அந்த நேரத்தில்

விளைவுகளின் சுமைகள் சுமக்க முடியாமல் பாரதூரமான கஷ்டத்துக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.

இது போக எயிட்ஸ் என்ற உயிர்க்கொல்லி நோய் மூலம் பாரதூரமான விளைவை இந்த கட்டுப்பாடுகளற்ற உறவுமுறை தோற்றுவிக்கும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அழிக்கப்பட்டு முடிவாக மரணத்தை ஏற்படுத்தும். எயிட்ஸ் நோயானது தகாத உறவின் மூலம் அதாவது அதிகமான ஆண்களுடன் ஒரு பெண் உறவு கொள்ளும் போது ஏற்படுகின்றது. எயிட்ஸ் தொற்றக் கூடிய வாய்ப்பு பெண்களுக்கே அதிகமாக உள்ளது. எனவே பெண்கள் உடல் உறவு சுதந்திரத்தை பயன்படுத்தினால் அதன் விளைவு எயிட்ஸ் தான். எனவே எயிட்ஸ் உள்ள பெண்ணிலிருந்து அவளுடன் உறவு கொள்ளும் ஆண்களுக்கும் அது பரப்பப்படுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற விளம்பரமானது ஒருத்திக்கு ஒருவன் என திருத்தப்பட வேண்டும்.

அரபு நாடுகளில் ஒரு ஆண் நான்கு மனைவிகளை வைத்திருக்கின்றான். ஆனால் எயிட்ஸ் வருவதில்லை. ஆணுக்கு நான்கு பெண்களுடன் உறவு வைத்தால் எயிட்ஸ் நோய் வராது. ஆனால் பெண்ணுக்கு நான்கு கணவன்மார்கள் இருந்தால் எயிட்ஸ் நோய் வந்துவிடும். இந்த வாசகத்தை இவர்கள் விளங்கிக்கொள்ளாமல் இருக்கின்றனர். எனவே கட்டுப்பாடற்ற, ஒழுக்கமற்ற இந்த உடலுறவு சுதந்திரத்தை வழங்கினோமேயானால் அதன் விளைவு எயிட்ஸ் நோயை உண்டாக்குவது தான். மேலைநாடுகளில் பாதுகாப்பான உறவு முறை என கடைப்பிடித்து இதனைக் குறைத்துக் கொண்டார்கள். அதாவது ஆணுறைகளைப் பயன்படுத்தி இந்த எயிட்ஸை குறைத்திருக்கின்றார்கள். உலகத்திலேயே எயிட்ஸ் நோய் அதிகமாக ஆபிரிக்காவிலும் அடுத்து இந்தியாவிலுமே உள்ளது. இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் அதிகம் ஆகும். எனவே இந்த மாதிரியான கேடுகெட்ட சுதந்திரம் மூலம் வரக்கூடிய விளைவை தடுக்க வேண்டும் எனில் சட்டம் போட வேண்டும். கட்டுப்பாடற்ற இந்த பாலியல்

உறவால் குடும்பம் என்பது இல்லாமல் ஆகிவிடும். இதனால் வாரிசுகள் கூட அற்றுப் போய் விடும். இந்த மாதிரியான உறவுகளை விரும்புபவர்கள் எயிட்ஸில் இருந்து தப்பிப்பதற்கு கணவன் மனைவியாக வாழுங்கள் என்று சொல்வதை விட்டுவிட்டு பாதுகாப்பாக தப்பு பண்ணுங்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தின் விளம்பரத்தில் கூட பாதுகாப்பாக உறவு கொள்ளுங்கள் என்று தான் உள்ளது. இப்படி உலகில் உள்ள அனைவரும் கட்டுப்பாடற்ற உறவை பாதுகாப்பான முறையில் மேற்கொண்டால் உலகில் வாரிசே உருவாகாது. எல்லோரும் துறவரம் மேற்கொள்வது போன்று எல்லோரும் இத்தகைய கட்டுப்பாடற்ற உறவு கொண்டாலும் அதுவும் மனித குலத்தை அழித்துவிடும். ஒட்டுமொத்த உலகத்தை அழிக்கும் ஒரு சித்தாந்தமாக இந்த கட்டுப்பாடற்ற உறவு கொள்ளும் முறையும் இருக்கிறது.

## *ஓரினச்சேர்க்கை*

ஒரு ஆண் ஒரு பெண்ணோடு தான் உறவு கொள்ள முடியும். அது தான் இயற்கை. அப்படித்தான் அல்லாஹ் படைத்திருக்கின்றான். இதை உடைத்துவிட்டு ஆணுக்கு ஆண், பெண்ணுக்கு பெண் என்ற ஓரினர்சேர்க்கை என்ற வழிமுறை கையாளப்படுகின்றது. இதில் என்ன தப்பு இருக்கிறது என்று கேட்குமளவுக்கு உள்ளது. இந்த ஓரினச்சேர்க்கையை சட்டம் அங்கீகரிக்க வேண்டும் என்று கூட போராட்டங்கள் நடத்துகின்றனர். இதுவும் எல்லோரிடையேயும் பரவினால் இதன் விளைவு என்னவாகும்? முன்னர் கூறிய அதே முடிவு தான், மனித குலம் அழிந்து போய்விடும். இந்த மாதிரி பழக்கத்துக்கு ஆளான ஒருவரது முதிய வயதில் அவரைக் கவனிக்கக் கூட வாரிசுகள் இருக்காது. ஒரு ஆணுக்கு ஆண் துணையாக இருந்தால் ஒருவொருக்கொருவர் சேவை செய்து கொள்ள மாட்டார்கள். ஆணுக்கு பெண், பெண்ணுக்கு ஆண் துணையாக இருந்தால் தான் ஒருவொருக்கொருவர் ஒத்தாசையாக வாழ முடியும். பாலியல்

வேறுபாடானாது சேவை செய்ய தூண்டும். இது இயற்கையான நடைமுறையாகும். ஆனால் இந்த ஓரினச்சேர்க்கையை தூண்டக்கூடிய வகையில் படங்கள், செய்திகள், கட்டுரைகள், ஆராய்ச்சிகள் என போய்க்கொண்டிருக்கின்றன. இப்படியான ஓரினச்சேர்க்கையும் குடும்ப வாழ்க்கையை நாசமாக்கிவிடும்.

இந்த மாதிரி நடத்தையுடைய சமுதாயத்துக்கே அல்லாஹ் ஒரு நபியை அனுப்பி இருக்கின்றான். இஸ்லாத்தைப் பொறுத்த வரை விபச்சாரத்தையும், ஓரினச்சேர்க்கையையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த மாதிரியான சிந்தனை வந்தால் குடுமபத்துக்கு துரோகம் செய்பவர்களாகத்தான் வாழ முடியும். இவற்றை தனியே ஆதரித்து செய்யும் ஒரு பிரினர் ஒரு புறம் இருக்க குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு இந்த விபச்சாரத்திலும், ஓரினச்சேர்க்கையிலும் ஈடுபடுபவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். இது மிகவும் அபாயகரமான ஒரு காரியமாகும். முதல் நபியின் காலத்திலேயே இந்த ஓரினச்சேர்க்கை வந்தது என்று சொல்வார்கள். அது பொய்யான செய்தியாகும். இஸ்லாத்தின் பார்வையில் ஆதி மனிதனிடம் இது இருக்கவில்லை. இப்பழக்கம் இயற்கையாக வந்தது கிடையாது. எவனோ ஒருவன் கொண்டு வந்த வழிமுறை தான் இந்த ஓரினச்சேர்க்கை ஆகும். இத்தகைய பழக்கமுடைய சமுதாயத்திடம் லூத் நபி அவர்கள் "உலகத்தில் உங்களுக்கு முன்னர் யாரும் இதை செய்ததில்லை" என்று கூறுகிறார்கள். எனவே லூத் நபியின் சமுதாய மக்கள் தான் முதன் முதலாக உலகத்தில் இத்தகைய ஈனச்செயலை செய்தார்கள். எனவே ஆதிகாலத்தில் இருந்து ஆணை பெண்ணும், பெண்ணை ஆணும் விரும்பக்கூடியவர்களாகவே வாழ்ந்து கொண்டு வந்தார்கள். ஆதம் (அலை), ஹவ்வா (அலை) என்று தான் அல்லாஹ் படைத்தான். அவர்களில் இருந்து தானே மனிதர்கள் பல்கிப்பெருகினார்கள். இந்த சீரான அமைப்பு லூத் நபியின் காலத்திலேயே உடைகிறது. இதற்கு அல்லாஹ் எத்தகைய தண்டனையை வழங்கினான் என்றால் அந்த ஊருடைய மேல் பகுதியை கீழ்ப்பகுதியாக ஆக்கினோம், அவர்கள் மீது கல்மாரியைப்

பொழிந்தோம், அவர்களின் கண்களைக் குருடாக்கினோம் ஆகிய மூன்று தண்டனைகளை அல்லாஹ் இந்தச் செயல் காரணமாக வழங்கினான்.

அல்லாஹ்வுக்கு வெறுப்பான இந்தக் காரியத்தைத் தடுக்க ஒரு நபியை அனுப்பி இந்தக் கடுமையான தண்டனையைக் கொடுத்து தனது கோபத்தைக் காட்டுகிறான்.

ولوطا إذ قال لقومه أتأتون الفاحشة ما سبقكم بها من أحد من العالمين (80) إنكم لتأتون الرجال شهوة من دون النساء بل أنتم قوم مسرفون (81

லூத்தையும் (தூதராக அனுப்பினோம்) உலகில் உங்களுக்கு முன்
யாரும் செய்திராத வெட்கக் கேடான காரியத்தையா
செய்கிறீர்கள்? என்று தமது சமுதாயத்திடம் கேட்டார். (அல் குர்ஆன் 7 - 80)

நீங்கள் பெண்களை விட்டு இச்சைக்காக ஆண்களிடம் செல்கிறீர்கள்! நீங்கள் வரம்பு மீறிய கூட்டமாகவே இருக்கிறீர்கள் (என்றும் கூறினார்) (அல் குர்ஆன் 7- 81)

உலகிலேயே இந்த இழி செயலை செய்தவர்களில் முதல் கூட்டம் இவர்கள் தான். இதற்காகத் தான் அந்தக் கூட்டத்தையே இறைவன் அழித்ததாக தனது திருமறையில் சொல்லிக் காட்டுகிறான்.

فلما جاء أمرنا جعلنا عاليها سافلها وأمطرنا عليها حجارة من سجيل منضود

நமது கட்டளை வந்த போது அவ்வுரின் மீது சுடப்பட்ட கட்களால் கல் மழை பொழிந்து அதன் மேல் பகுதியை கீழ்ப் பகுதியாக்கினோம். (அல் குர்ஆன் 11-82)

எனவே இந்த ஓரினச்சேர்க்கையானது பாரதூரமான, பயங்கரமான ஒரு குற்றம். குடும்பத்தையும் நாசமாக்கி, அல்லாஹ்விடத்திலும்

தண்டனையைப் பெற்றுத்தரும் செயலாக உள்ளது. அல்லாஹ் இதைத் தடுத்தும் இதனைக் கைவிடாத காரணத்தால் அல்லாஹ்வோடு யுத்தம் செய்ததாகத் தான் அமையும். இந்த ஓரினச்சேர்க்கை கூட எயிட்ஸ் உண்டாக காரணமாக அமைகின்றது என்பதை இப்போது கண்டுபிடித்துள்ளனர். ஒரு பெண் பல ஆண்களோடு உறவு கொண்டாலும் எயிட்ஸ் உண்டாகும், மலப்பாதையில் உறவு கொண்டாலும் எயிட்ஸ் உண்டாகும். இந்த காலத்தில் இத்தகைய கேடுகளுக்கு எயிட்ஸ் என்ற நோயை வழங்குவதன் மூலம் அல்லாஹ் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளான்.

1. துறவரம் மீது நாட்டங்கொள்ளக் கூடாது. துறவரம் செய்பவர்களை நல்லவர்கள் என்று எண்ணி விடக்கூடாது.

2. கட்டுப்பாடற்ற உறவு முறையை எதிர்த்து கடுமையாக பேச வேண்டும்.

3. ஓரினச்சேர்க்கையின் பாரதூரத்தையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

அத்துடன் இவற்றால் ஏற்படும் கேடுகள் மற்றும் மறுமையில் ஏற்படும் தண்டனைகள் போன்றவற்றை எடுத்துக் கூறவேண்டும்.

## குர்ஆனும் குடும்பவியலும்

குடும்ப அமைப்பை பொறுத்தவரைக்கும் அல்லாஹ்வுடைய இயற்கையான நியதி என்னவென்று சொன்னால் மனிதர்கள் குடும்பமாக வாழ வேண்டும். அதற்காகத் தான் அல்லாஹ் மனிதர்களை படைத்திருக்கிறான்.

### எதற்காக ஆணிலிருந்து பெண்ணை இறைவன் படைத்தான்?

திருமறைக்குர்ஆனில் அல்லாஹ் “**அவனே உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்தான். அவரிலிருந்து அவரது துணைவியை அவளிடம் அவர் மன அமைதி பெறுவதற்காகப் படைத்தான்.**” **(அல்குர்ஆன் 7 : 189)**

**மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். (அல்குர்ஆன் 4 : 1)**

இன்னும் பல வசனங்களில் ஆணிலிருந்து தான் பெண் படைக்கப்பட்டாள் என்று கூறப்படுகின்றது. எதற்காக படைக்கப்பட்டார்கள் என்று சொன்னால் அவர்கள் மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் என்று அல்லாஹ் சொல்லிக் காட்டுகிறான். ஆணை வேறாகவும் பெண்ணை வேறாகவும் படைத்திருந்தால் இரண்டு பேருக்கும் இடையில் தொடர்பு இருக்காது. எதற்காக இப்படி ஓர் ஆணிலிருந்து ஒரு பெண்ணைப் படைத்தான் என்பதற்கு படைத்த அவனே காரணமும் கூறுகிறான், “இந்த ஆண் அந்த பெண்ணிடத்திலே இணைந்து அமைதி பெற வேண்டும், நிம்மதி பெற வேண்டும்”. அவன் முதலில் ஆணிலிருந்து ஆணை படைக்கவில்லை, பெண்ணிலிலருந்து பெண்ணை படைக்கவில்லை. மாறாக ஆணிலிருந்தே பெண்ணைப் படைத்துள்ளான். சந்தோஷம் அடைவதற்கான ஒரு அமைப்பாகவே ஆணிலிருந்து பெண்ணை அல்லாஹ் படைத்துள்ளான். அப்போது தான் அவர்களுக்கு மத்தியில் இணைப்பிருக்கும், அன்பு இருக்கும் என்று காரணத்தையும் சேர்த்தே சொல்கின்றான். ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியில் அன்பையும், கருணையையும் உருவாக்கியுள்ளான். அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கும் இந்த அமைப்பானது அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு ஒரு அத்தாட்சியாக இருக்கிறது.

திருமணம் செய்யும் ஒரு ஆண், ஒரு பெண் வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள், வெவ்வேறு மொழிகளைக் கூட பேசுபவர்களாக இருப்பார்கள். ஆனால் திருமணத்தின் மூலம் அவர்கள் மத்தியில் அப்படி ஒரு அன்பு ஏற்படுகின்றது. எனவே ஒருவொருக்கொருவர் உதவுவதிலும், அரவணைப்பதிலும், கவனிப்பதிலும் ஈடுபாடு காட்டுவதைக் காணலாம். அவனுக்காக இவள்

வாழ்வது, இவளுக்காக அவன் வாழ்வது போன்ற இணக்கம் உண்டாவதை அல்லாஹ் தான் ஏற்படுத்தியிருக்கின்றான் என்று கூறுகிறான்.

**நீங்கள் அமைதி பெற உங்களில் இருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன. (அல்குர்ஆன் 30 : 21)**

நாம் சிந்தித்துப் பார்த்தோம் எனில் கணவன், மனைவி மத்தியில் ஏன் இப்படி அன்புடன் இருக்கிறார்கள்? என்பதில் நிறைய சான்றுகள் இருக்கின்றன என்று அல்லாஹ் சொல்கின்றான்.

**அவனே உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்தான். (உங்களுக்கு) தங்குமிடமும் ஒப்படைக்குமிடமும் உள்ளன. புரிந்து கொள்ளும் சமுதாயத்திற்குச் சான்றுகளை விளக்கியுள்ளோம். (அல்குர்ஆன் 6 : 98)**

ஆணிலிருந்து பெண்ணைப் படைத்ததில் தான் அமைதி கிடைக்கும், அப்படி இருந்தால் தான் ஒருவொருக்கொருவர் ஈர்க்கப்படுவார்கள் என்ற உண்மை புலப்படுகிறது.

**உங்களை ஒரே ஒருவரிலிருந்து அவன் படைத்தான். பின்னர் அவரிலிருந்து அவரது ஜோடியைப் படைத்தான். (அல்குர்ஆன் 39 : 6)**

ஆதம் (அலை) அவர்களைப் படைத்து சொர்க்கத்தில் எல்லா விதமான இன்பங்களையும் வழங்கி அங்கு தங்கவும் வைப்பதற்கு முன்னால் அவரது ஜோடியை படைத்துள்ளான்.

**“ஆதமே! நீயும், உன் மனைவியும் இந்த சொர்க்கத்தில் குடியிருங்கள்”. (அல்குர்ஆன் 2 : 35)**

எனவே ஜோடியாகத் தான் இருவரையும் சொர்க்கத்தில் குடியமர்த்துகிறான். ரொம்ப காலம் தனிமையில் காக்க வைத்து விட்டு அவரது ஜோடியை அல்லாஹ் வழங்கவில்லை. மாறாக ஆதம் (அலை) அவர்களைப் படைத்த உடனேயே அவரது ஜோடியான ஹவ்வா (அலை) அவர்களைப் படைத்து விட்டான். இதிலிருந்து ஆண், பெண் என்ற

முறையில் தான் உறவுகள் இருக்க வேண்டும் என்ற அல்லாஹ்வின் நியதி விளங்குகின்றது. ஆண், பெண் என்ற முறைக்கு மாற்றமான எந்த முறைக்கும் இஸ்லாத்தில் அனுமதி கிடையாது. எந்தவொரு காரணத்தைக் கொண்டும் இதற்று மாற்றமானதை நியாயப்படுத்தவே முடியாது. இதை ஏன் வலியுறுத்து சொல்கின்றோம் எனில் சமீபத்தில் பிரபல்யமான ஒரு வெளிநாட்டு தொலைக்காட்சி சேவையில் எவனோ ஒரு தலைப்பாகை, ஜுப்பா அணிந்த முஸ்லிம் பெயர் தாங்கியை வைத்து ஓரினச்சேர்க்கையை ஆதரிக்குமுகமாக ஒரு நிகழ்ச்சி காட்டப்பட்டது. இதை மாற்று மதத்தவர்கள் இஸ்லாத்தில் இவ்வாறான ஒழுக்கக்கேடுகளுக்கு அங்கீகாரம் இருக்கின்றது, இஸ்லாம் நாசமாகி விட்டது, முஸ்லிம்களும் நாசமாகி விட்டார்கள் என்பதை காட்டுவதற்காக இப்படியான பேட்டிகளை வழங்கி இதை ஒரு செய்தியாக பிரபல்யப்படுத்துகிறார்கள்.

அல்லாஹ் ஒரு காலத்தில் ஒரு சமுதாயத்தை அழிப்பதாற்காக ஓரினச்சேர்க்கையை காரணமாக அமைக்கின்றான் எனில் அது எவ்வளவு பெரிய குற்றம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## குடும்ப அமைப்பில் ஏற்படும் நன்மைகள்

1. *குடும்ப உறவினர்களின் உதவி கிடைத்தல்*

குடும்பமாக இருக்கிறோமே அதில் பலவித நன்மைகள் இருக்கின்றன. அல்லாஹ் அமைத்த இந்த குடும்ப அமைப்பில் உடலுக்கு, மனதுக்கு, சமூகத்துக்கு நன்மைகள் இருக்கின்றன. ஆகமொத்தத்தில் எல்லா நன்மைகளும் கலந்து குடும்பம் என்பதில் தான் இருக்கிறது. குடும்பம் என்பது ஒரு ஆண் ஒரு பெண்ணிலிருந்து ஆரம்பிக்கும், கணவன் மனைவி தான் அதன் தொடக்கமாக இருப்பார்கள். பின்பு கணவனாக இருப்பவன் தந்தையாகவும், மனைவியானவள் தாயாகவும் மாறுவார்கள். எனவே உறவு முறைகள் கூட இந்த குடும்பம் என்பதின் மூலம் தான் உருவாகும். அது மாதிரி இவ்விருவரின் தாய் தந்தையர்கள், சகோதர சகோதரிகள் போன்றோர் பல்வேறுபட்ட உறவுமுறைகளைப் பெறுகின்றனர். எனவே

குடும்பம் மூலமாக ஒரு சமூகம்,கோத்திரம் உருவாகின்றது. இதனால் மனிதனுக்கு அவனது நெருக்கடியான கட்டத்தில் பக்கபலமாக இந்த உறவினர்கள் இருப்பார்கள்.

ஏதாவது பிரச்சினைகள் வரும்போது வேறு எவரும் உதவி செய்ய வருவார்களோ இல்லையோ அவர்களது சகோதர சகோதரிகள் முன்வருவார்கள் இல்லையா? தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று சொல்வார்கள். தம்பி இருந்தால் தானே அவன் படையைக் கண்டால் கூட பயப்பட மாட்டான். ஏனென்றால் அண்ணனுக்கு பிரச்சினை என்றால் தம்பி துடிப்பான், தம்பிக்கு கஷ்டம் என்றால் அண்ணன் துடிப்பான். இந்த மாதிரி ஒருவொருக்கொருவர் பக்கபலமாக இருக்கின்ற உறவு முறை எதனால் கிடைக்கின்றது என்று பார்த்தால் குடும்பம் என்ற அமைப்பில் நுழைந்தால் தான் கிடைக்கும்.

குடும்பம் இல்லாத முறையில் இந்த உடல் ரீதியான உணர்வு வரும் போது மாற்று வழியில் (ஓரினச்சேர்க்கை, கட்டுப்பாடுகளற்ற முறை) சென்றவனுக்கு உறவினர்கள் இருப்பார்களா? இருக்க மாட்டார்கள். இவர்களுக்கு இந்த உறவினர்களுடன் பாசத்தோடு பழகுகின்ற இன்பம் கிடைக்காது. அவன் உணர்ச்சி வேகத்தில், இளமை முறுக்கில் தவறான வழியில் சென்று முதுமையில் அநாதையாகவும், தனியாகவும், நோயையும் வாங்கிக்கொண்டு இருக்க வேண்டி வரும். கடைசியில் ஒரு கட்டத்தில் என்னவாகுவான் என்றால் அவனுக்கு பக்கபலமாக யாருமே இருக்க மாட்டார்கள். அவன் மட்டுமே இருப்பான். அவனுக்கென்று ஒரு சமூகமோ, கூட்டமோ, கோத்திரமோ இருக்காது.

எல்லோரும் எல்லோருக்கும் உதவி செய்ய முன் வரமாட்டார்கள். ஒரு நெருக்கம் இருந்தால் தான் உதவி செய்வார்கள். எனக்கு ஒருவர் உதவி செய்கிறார் எனில் அவர் எந்த விதத்திலாவது எனக்கு தொடர்பில் உள்ளவராக அல்லது உறவினராக இருக்க வேண்டும். குடும்பம் என்ற அமைப்புக்குள் நுழைந்தால் தான் இவையனைத்தும் கிடைக்கும்.

விவரம் கெட்டுப்போய் சிலபேர் சுதந்திரம் என்ற பெயரில் குடும்ப வாழ்க்கையை சீரழிக்கின்ற விதமான நாடகங்கள், சினிமாக்களை எடுத்து தீய கருத்துருவாக்கத்தை உருவாக்குகி அறியாத மக்களுக்கும் கேடு செய்கின்றான். விளங்காமல் தப்பான முடிவெடுப்பவனுக்கு கேடு செய்து அவனது முதுமையில், தள்ளாத வயதில், கஷ்டமான நேரத்தில்

அவனை அம்போ என்று நிப்பாட்டுவதற்குத் தான் இந்த சித்தாந்தங்கள் உதவுகின்றன. குடும்ப அமைப்பிலேயே உறவினர்கள் கிடைக்கின்றனர். எனவே இவற்றை கட்டிக்காக்க பாடுபட வேண்டும். குடும்பத்தை சிதைத்துவிடக் கூடாது.

2. *மனித குல பெருக்கம் ஏற்படல்*

குடும்பம் என்ற அமைப்பு இருந்தால் தான் மனித குலம் பெருக முடியும். மனுதகுலம் பெருகினால் தான் முன்னேற்றம் ஏற்படும். மக்கள் தொகை அதிகரிக்காமல் இருந்தால் இப்போது நாம் அனுபவிக்கின்ற பல நவீன விடயங்களை அனுபவிக்க முடியுமா? மக்கள் தொகை பெருக்கத்தால் தான் கண்டுபிடிப்புகளும் அதிகமாயின. மக்கள் தொகை குறைவாக இருப்பின் கண்டுபிடிப்புகளை மேற்கொள்பவனுக்கு நஷ்டமே ஏற்படும். அவற்றை வாங்குபவரின் தொகை அதிகரித்தால் தான் இலாபம் பெற இயலும்.

உதாரணத்திற்கு ஒரு ஊரில் பத்து பேர் தான் இருக்கின்றார்கள் எனில் கண்டுபிடிக்கப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்ய எவர் போவார்? ஓரிரண்டு பேர் செல்வதற்கு பஸ் நடத்துனருக்கு நஷ்டம் தான் ஏற்படும். சனப்பெருக்கம் கூடினால் தான் பஸ்களும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு மக்கள் பயணிக்கவும் இலகுவாக இருக்கும். அதே போன்று மைக் எதற்கு கண்டுபிடிக்கப்பட்டது? ஓரிரண்டு பேர் கேட்பதற்கு மைக்கே தேவையில்லை. சனப்பெருக்கம் அதிகமாக அதிகமாகத் தான் தேவைகளும் பெருகி அதற்கேற்ற சாதனங்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. எனவே குடும்பம் இல்லையென்றால் இந்த மனித வளம் கிடைத்திருக்காது.

3. *கணவன், மனைவிக்கு மத்தியில் ஏற்படும் ஒழிவு மறைவின்மை*

கணவன், மனைவி இருவருக்கிடையில் உடல் ரீதியான தொடர்பு இருப்பதன் காரணத்தால் அவர்களிடையே எந்த வித ஒழிவு மறைவும் இருக்காததும் குடும்ப அமைப்பினால் கிடைக்கும் ஒரு நன்மையாகும். எனவே ஒருவர் மீது ஒருவர் அக்கறையுடன் அதிகமாக ஈடுபாட்டுடன் நடந்து கொள்கிறார்கள். கணவனுக்கு தலைவலி ஏற்பட்டால் மனைவி துடிதுடிக்கிறாள், மனைவிக்கு வயிற்று வலி ஏற்பட்டால் கணவன்

துடிதுடிக்கிறான். இதற்கெல்லாம் காரணம் குடும்பம் என்ற அமைப்பினால் ஏற்படும் அன்பினால் ஆகும்.

4. *ஒருவருக்கொருவர் தியாகம் செய்தல்*

குடும்ப அமைப்பில் உள்ள அனைவரும் தியாகம் செய்கின்றனர். குடும்பத்தில் ஒருவருக்கு கஷ்டம் வரும்போது தனக்கு தேவையிருந்தாலும் கூட கஷ்டம் உள்ளவரைக் கவனிப்பதும் இந்த குடும்ப அமைப்பில் தான். மனைவியானவள் சமைத்த உணவை தனது பசியை அடக்கிக்கொண்டு கணவனுக்கும், தாயானவள் தனது குழந்தைகளுக்கும் அர்ப்பணிப்பதைக் குடும்ப அமைப்பில் காணலாம். சுயநலம் குறைந்தவர்களாக அனைவரும் இருப்பார்கள். எனவே சம்பாதிப்பதன் மூலம் ஒருவன் தனது குடும்பத்தைக் கவனிக்கிறான். இவையனைத்தும் குடும்பம் என்ற ஒன்றின் மூலமே ஏற்படுகின்றது. இப்படி தனக்காக தனது குடும்பத்திற்காக சம்பாதிப்பதை சுயநலம் என்று எடுத்துக்கொள்ள முடியாது. காரணம் குடும்பத்திற்காக தான் ஒவ்வொருவரும் மேலும் மேலும் பணத்தை சம்பாதிக்கின்றார்கள். வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் கூட கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை அனுப்புவதும் தமது குடும்பத்திற்காகவே ஆகும். எனவே ஒருவொருக்கொருவர் செய்து கொள்ளும் தியாகத்தை குடும்பம் என்ற அமைப்பில் காணலாம்.

எனவே குடும்பம் என்ற அமைப்பை விட்டு வெளியேறியவனுக்கு சுயநலத்தைத் தவிர வேறொன்றும் இருக்காது. அவன் தன்னுடைய சுகத்தையும், நலத்தையும் மட்டுமே கவனிப்பவனாக இருக்கிறான். எந்தவித சமூக அக்கறையும், தியாக மனப்பான்மையும் இல்லாதவனாக மாறிவிடுகின்றான்.

5. *இல்லற வாழ்க்கையில் கணவன், மனைவிக்கு கிடைக்கும் உடல் ரீதியான மற்றும் மன ரீதியான நன்மைகள்*

இந்த குடும்ப அமைப்பில் உடல் ரீதியான மற்றும் மன ரீதியான நன்மைகளும் இருக்கின்றன. கணவன், மனைவி இருவரும் அந்நியோன்னியமாக எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருப்பார்களேயானால் அவர்களுக்கு ஒழுங்கான இல்லற வாழ்க்கை

கிடைக்கும். முழு உடம்பும் ஈடுபடக்கூடிய ஒரே ஒரு வேலை இந்த இல்லறமேயாகும். தாம்பத்தியத்தில் ஈடுபடும் போது தான் உடம்பில் உள்ள அணுக்கள் அனைத்தும் வேலை செய்கின்றன. ஒவ்வொரு வேலைகளையும் செய்யும் போதும் அதற்கு சம்பந்தப்பட்ட உறுப்புக்கே வேலை இருக்கும். ஆனால் தாம்பத்தியத்தில் ஈடுபடும் போது மாத்திரம் ஒட்டுமொத்த உடம்பின் அணுக்களும் ஈடுபடுகின்றன. அதனால் தான் ஒரு மனிதனுக்கு பிறக்கக் கூடிய குழந்தை அச்சசலாக அவன் மாதிரியே இருக்கின்றது. அந்த உயிரணு உடலின் எல்லா பகுதிகளில் இருந்தும் சேர்க்கப்பட்டு கருவுக்குள் செலுத்தப்படுகின்றது. சில சமயங்களில் குழந்தையின் சாயல் பெற்றோரிலிருந்து வேறுபடலாம். காரணம் இரண்டு பேருடைய ஜீன்களும் கலந்துள்ள படியால் ஆகும். ஆகவே முழு உடம்பும் இயங்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இந்த தாம்பத்தியத்தில் தான் ஏற்படுகின்றது.

I. *மூளையின் திறன் அதிகரித்தல்*

இந்த இல்லற வாழ்க்கையில் ஒழுங்கான முறையில் ஈடுபட்டு சந்தோஷம் அடைவார்களேயானால் முதலாவதாக கிடைக்கக் கூடிய நன்மை மூளையின் திறன் அதிகரிப்பதாகும். இதனை எலிகளைக் கொண்டு நடாத்திய ஆராய்ச்சியில் இருந்து கண்டுபிடித்துள்ளார்கள். அமெரிக்காவில் பல குழுக்களாக ஒரே மாதிரியான, ஒரே வயதுடைய சில எலிகளைத் தனியாகவும், சில எலிகளைப் பெண் எலிகளோடு சேர்த்தும் தங்க வைத்து அதிலும் ஆண், பெண் எலிகளை ஒரு வாரத்துக்கு, ஒரு மாதத்துக்கு சேர வைத்து ஆராய்ச்சி செய்த முடிவில் ஆண், பெண் ஜோடியாக, சுதந்திரமாக சேர்கின்ற எலிகளின் மூளை வளர்ச்சி அதிகமாக இருக்கின்றது, சுறுசுறுப்பாக செயல்படுகின்றது என்பதை கண்டுபிடித்துள்ளார்கள். சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு ஹோமோன்கள் சுரந்து மூளையை விரிவு படுத்துவதற்கு, மூளையின் திறனை அதிகரிப்பதற்கு இந்த தாம்பத்தியம் உதவுவதாக கண்டுபிடித்துள்ளார்கள். எனவே இவை குடும்ப அமைப்பின் மூலம் தான் ஏற்பட முடியும். பெண்களில் சிலரிடம் திருமணமாவதற்கு முன் இருந்ததை விட பேச்சில் அதிக தெளிவு இருப்பதை திருமணத்தின் பின்னர் காணலாம். எனவே இல்வாழ்க்கையின் மூலம் மூளைக்கு அதிக தெளிவு, விருத்தி ஏற்படுத்துவதும் ஒரு நன்மையாகும்.

## II. *உடலில் ஏற்படும் நன்மைகள்*

கொழுப்பு சத்து அதிகமாக உள்ள ஒருவர் ஒரு மணித்தியாலத்திற்கு நடப்பதனால் 300 கலோரி அல்லது 500 கலோரி பெறுமானமுள்ள கொழுப்பைக் குறைத்துக் கொள்ளலாம். இதனால் கை, கால், இதயம் போன்ற உறுப்புகளுக்கு தான் வேலை இருக்கும். ஆனால் தாம்பத்தியத்தில் முழு உடம்பும் இணங்குவதால் அதிகமான கலோரிகள் இழக்கப்படுகின்றன. இதனால் கொலஸ்ட்ரோல் பிரச்சினை ஏற்படாது.

அதிகமான கலோரிகள் இல்லறத்தில் ஈடுபடும் போது எரிக்கப்படுவதால் கொழுப்புச்சத்து குறைந்து இரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது. இதனால் இரத்த அழுத்தம் சாதாரண நிலையில் இருக்கும். எனவே டென்ஷன் குறையும், மனஅழுத்தம் இல்லாமல் போகும். மனஅழுத்தம் ஏற்பட மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் காரணங்கள் இருக்கின்றன. ஒருவர் ஆத்திரமடையும் போதும் கோபம் அடையும் போதும் டென்ஷன் ஆவார். அதே போன்று உடம்பில் ஏற்படுகின்ற உபாதைகளாலும் மனஅழுத்தம் ஏற்படும். ஆகவே பிரச்சினைகள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஏற்படும் போது மனஅழுத்தமும் உண்டாகின்றது. ஆகவே தாம்பத்தியத்தில் ஈடுபடும் போது உடல் ரீதயான அனைத்து கொழுப்புகள், அடைப்புகள், கழிவுகள் நீக்கப்படுகின்ற காரணத்தால் மனஅழுத்தம் இல்லாத அமைதியான நிலையை மனிதன் அடைகின்றான் என்பதையும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளார்கள். எனவே இரத்த அழுத்தம் சீராகின்ற நன்மையும் இல்லறத்தின் மூலம் கிடைக்கின்றது.

இல்லறத்தில் ஈடுபடும் போது ஏற்படுகின்ற வியர்வையும் மற்ற வேலைகளில் ஈடுபடும் போது ஏற்படுகின்ற வியர்வையும் வித்தியாசப்படுகின்றது என்கிறார்கள். இல்லறத்தின் போது ஒட்டுமொத்த உடம்பின் அனைத்துப் பகுதியிலிருந்தும் உப்புக்களும், நச்சுப்பொருட்களும் வெளியேற்றப்படுகின்றன. எனவே சுத்தமான ஒரு நிலையை மனிதன் அடைகின்றான். தாம்பத்தியத்தை ஒழுங்கான முறையில் மேற்கொண்டால் நன்றாக தூக்கம் வரும், நிம்மதி ஏற்படும்.

உடற்பயிற்சி விளையாட்டுகளில் ஈடுபடும் சிலருக்கு விளையாட்டுச் சிந்தனையிலேயே மட்டும் அதிகம் ஈடுபடுபவர்களால் ஒழுங்காக விளையாட முடிவதில்லை என்றும் அதற்குக் காரணம் தம்பதியினர்

பிரிந்து இருப்பது தான் என்றும் கண்டுபிடித்துள்ளார்கள். மாதக்கணக்கில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருப்பதால் உடலை மட்டுமே கவனிக்கின்றமையாலும் வேறு சிந்தனையில்லாமையினாலும் ஒழுங்காக விளையாட்டு வீரர்களுக்கு விளையாட முடிவதில்லை என்றும் கூறியுள்ளார்கள். விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுபவர்களை பரீட்சித்துப் பார்த்ததன் விளைவாக அவர்கள் ஒழுங்கான முறையில் விளையாடாமைக்கு காரணம் அவர்கள் தமது ஜோடியைப் பிரிந்து இருப்பதனால் தான் என்பதை கண்டுபிடித்துள்ளார்கள். அவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டால் சக்தி போய்விடும் என்று தப்பாக கூறப்பட்டதால் அவர்களுக்கு விளையாட்டில் ஒழுங்காக ஈடுபட முடியவில்லை. எனவே விளையாட்டில் ஈடுபடுவதோடு தமது ஜோடியுடன் தாம்பத்தியத்தில் ஈடுபட்டுக்கொண்டும் இருப்பவர்களது செயற்திறன், வீரம் அதிகரிக்கின்றது.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் உயிரைப் பணயம் வைக்கும் போர்க் களங்களுக்குச் செல்லும் போது மனைவியையும் கூட்டிக் கொண்டு தான் சென்றிருக்கிறார்கள். அப்போது தான் டென்ஷன் இல்லாமல் போர் செய்ய முடிந்தது. அந்த நேரத்தில் கூட சந்தோஷமான மனநிலையுடன் இருந்தால் தான் போருக்கான நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் செய்ய முடியும், மூளையும் ஒழுங்காக வேலை செய்யும். இல்லாவிடின் உடம்பு ஒரு இடத்திலும் மனது இன்னொரு இடத்திலும் இருந்தால் செய்யும் காரியத்தில் முழுமூச்சாக ஈடுபட முடியாது. யுத்த களமாக இருந்தாலும் சந்தோஷமான மனநிலையில் இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக சீட்டுக் குலுக்கிப் போட்டு ஒரு மனைவியை முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அழைத்துச் சென்றுள்ளார்கள். இது மாதிரியான பல நன்மைகள் இந்தக் குடும்ப வாழ்க்கையில் நமக்கு ஏற்படுகின்றன.